8. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 33-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1994). மாண்புமிகு நிதியமைச்சர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1994) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தற்போது முன்மொழிந்த சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுப்பதற்கான தீர்மானத்தை மொழியக் கேட்டுக் கொள்கிறேன். அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

பிற்பகல் *12-05*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி *30, 130* மற்றும் *132* ஆகியவற்றைத் தளர்த்தி, *1994* ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் *52/1994*) இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 5 உள் இனம் *4*-க்குப் பிறகு இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.